சுருக்கம்

மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை – பேருந்து நிலையங்களில் பாலூட்டும் தாய்மார்களுக்குத் தனி அறைகள் அமைப்பது – செயல்படுத்துதல் ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.IV) துறை

அரசாணை (நிலை) எண்.**99** நாள் : 14.07.2015

(திருவள்ளுவர் ஆண்டு 2046,
மன்மத, ஆனி – 29 )

படிக்க :–

பார்வை:- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 03.07.2015–ம் நாளிட்ட அறிக்கை.

*******

ஆணை:

பார்வையில் கண்ட அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 03.07.2015–ம் நாள் பின்வரும் ஆணையினை வெளியிட்டுள்ளார்கள்.

> "பாலூட்டும் தாய்மார்கள் பணி மற்றும் பயணம் நிமித்தமாக வெளியே செல்லும் போது பேருந்து நிலையங்களில் காத்திருக்க வேண்டியுள்ளது. தங்கள் இருப்பிடத்திலிருந்து பணி இடத்திற்கோ அல்லது தாங்கள் செல்ல விரும்பும் இடங்களுக்கோ செல்ல சில மணி நேரங்கள் தேவைப்படும். எனவே, பேருந்து நிலையங்களில் காத்திருக்கும் வேளைகளில் அன்னையர் தங்கள் குழந்தைகளுக்குத் தனிமையில் வசதியாக பாலூட்டும் வகையில் அரசு பேருந்து முனையங்கள் (bus terminals) நகராட்சி மற்றும் நகர பேருந்து நிலையங்கள் மற்றும் பேருந்து பணிமனைகளுடன் கூடிய பேருந்து நிலையங்கள் ஆகியவற்றில் பாலூட்டும் தாய்மார்களுக்குத் தனி அறைகள் அமைக்க நான் உத்திரவிட்டுள்ளேன். இந்த புதிய திட்டம் இந்த ஆண்டு உலக தாய்ப்பால் ஊட்டும் வாரமான ஆகஸ்டு மாதம் 1–ஆம் நாள் துவங்கப்படும்."

2. மேற்படி ஆணையினைச் சிறப்பாக செயல்படுத்தும் வகையில் கீழ்க்கண்ட வசதிகள் அமைத்திட அரசு ஆணையிடுகிறது.

(I). மாநகரரட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி பேருந்து நிலைய்ங்கள் ஆகியவற்றில், பாலூட்டும் தாய்மார்களுக்கு உரிய இடத்தை தேர்வு செய்து பின்வரும் வசதிகளுடன் மின் விசிறிகள், மற்றும் கழிவறை வசதிகள் கொண்ட தனி அறைகள்

I. நவீன ஓடுகள் பதிக்கப்பட்ட தரை (Tiled Flooring)

II. நான்கு அல்லது ஐந்து ஜோடி இரும்பிலான இருக்கைகள் (Four to Five Sets of Steel Seats)

III. இரும்பிலான குப்பைக் கூடை (Steel Trash Bin)

IV. சுத்தமான குடிநீர்

(II) அரசு பேருந்து முனையங்கள் மற்றும் பேருந்து பணிமனைகளுடன் கூடிய பேருந்து நிலையங்களைப் பொருத்தவரையில், போக்குவரத்துத் துறையும், சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தைப் பொருத்த வரையில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையும் உரிய இடங்களை தேர்வு செய்து மேற்குறிப்பிடப்பட்ட வசதிகளுடன் தனியறைகளை அமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு போக்குவரத்துத் துறை மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலான கீழ்க்காணும் அலுவலர்களைக் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு அமைத்தும் அரசு ஆணையிடுகிறது.

I. சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் உள்ள அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள் / பேரூராட்சி செயல் அலுவலர்கள் / மாவட்ட போக்குவரத்துக் கழக அலுவலர்கள்

II. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்

III. சுகாதார பணிகள் துணை இயக்குநர் / மாநகர சுகாதார அலுவலர்

மேற்படி ஒருங்கிணைந்தக் குழு இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து ஆய்வு மேற்கொள்ளும்.

3. இத்திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு போக்குவரத்துத் துறை மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. பணீந்திர ரெட்டி**
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

செயலாளர் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை
கூடுதல் தலைமைச் செயலாளர் போக்குவரத்துத்துறை
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை– 600 005.
முதன்மைச் செயலாளர் / ஆணையர்,
சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003.
பேரூராட்சிகளின் இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 108.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

<u>நகல்:</u>

மாண்புமிகு அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
நகராட்சி நிர்வாகம், ஊரகவளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை,
சென்னை– 600 009.
மாண்புமிகு அமைச்சர் (போக்குவரத்து) துறை, சென்னை– 600 009.
மாண்புமிகு அமைச்சர் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மை துறை,
சென்னை– 600 009.
முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.நி.1, வரவு–செலவு, மற்றும் பொது) துறை,
சென்னை – 9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

15/7/15

பிரிவு அலுவலர்

15/7/15